# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**S,C.No.133 of 2025**

Prosecution Witness No.P.W.9 (L.W.13)

| | |
|---|---|
| Name | இளஞ்செழியன் |
| Father/Husband Name | இளஞ்சேரன் |
| Calling/Occupation | மருத்துவர் |
| Age | 33 |
| Address | தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026.

(A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக குழந்தைகள் நலத்துறையில் பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 12.04.2023 அன்று குடியாத்தம் அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அருண்குமார் வயது 38 த/பெ. விநாயகமூர்த்தி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவர் 12.04.2023 அன்று மாலை 06.00 மணி அளவில் தெரிந்த ஒரு நபர் கத்தியால் தனது இடது ஆட்காட்டி விரலில் மேலோட்டமாக வெட்டியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவரின் இடது ஆட்காட்டி விரலில் மேலோட்டமான வெட்டிக்காயம் 0.5 செ.மீ நீளம் இருந்தது.

அது குறித்து நான் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று கருத்துரை வழங்கினேன். **வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.4. நான் வழங்கிய கருத்துரை சான்று அ.த.சா.ஆ.5** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எத்தனை மணிக்கு நான் பார்த்தேன் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயத்தின் நிறம், தன்மை குறிப்பிட்டேனா என்றால் இல்லை. அவர் வெளிப்புற நோயாளியாகத்தான் சிகிச்சை அளித்தேன். மேற்சொன்ன காயம் ஆட்டோவில் கீறிக்கொண்டால் ஏற்பட வாய்ப்புண்டு.

**மறுவிசாரணை – இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.03.12 17:01:06 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு),
வேலூர்.

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**S,C.No.133 of 2025**

Prosecution Witness No.P.W.10 (L.W.9)

| | |
|---|---|
| Name | ஜெயசங்கர் |
| Father/Husband Name | துளசிலிங்கம் |
| Calling/Occupation | ஷாப் |
| Age | 57 |
| Address | பள்ளிக்கொண்டா |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026.

(A2 Present)

**முதல் விசாரணை**

நான் பள்ளிக்கொண்டாவில் வசித்து வருகிறேன். சுமார் 2 அல்லது 3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில்லை, மதியம் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வரச்சொன்னார்கள். அங்கு கையொப்பம் கேட்டார்கள். வெள்ளை தாளில் கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் (பார்வை மகசர்) ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **அது அ.த.சா.ஆ.6.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை. மற்றபடி இந்த வழக்கு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 12.04.2023 அன்று இரவு 08.00 மணிக்கு நான் கடையில் இருந்தபோது ஆய்வளார் அவர்கள் என்னையும் பகதூர் என்ற சாட்சி உடன் இந்த வழக்கின் சம்பவ இடமான வேலூர் டீ என் எச் சர்வீஸ் சாலையில் சந்தோஷ் ராய் ஓட்டல் முன்பு ஆய்வாளர் பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் தயாரித்து அதில் நானும் பகதூலும் சாட்சி கையொப்பம் செய்து அதன் தொடர்ச்சியாக சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் மாதிரி வரைபடம் தயாரித்தார் என்றும் வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் மேற்கண்டவாறு நான் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள ஆஜர் எதிரி மற்றும் அ.சா.1 முதல் 8 வரை உள்ளவர்களுடன் உடன் இணைந்து எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.03.12 17:01:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு),
வேலூர்.

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**S,C.No.133 of 2025**

Prosecution Witness No.P.W.11 (L.W.14)

| | |
|---|---|
| Name | ராஜகுமாரி |
| Father/Husband Name | சசிகுமார் |
| Calling/Occupation | உதவி ஆய்வாளர் |
| Age | 43 |
| Address | குடியாத்தம் AWPS காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026.

(A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது குடியாத்தம் AWPS காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.04.2023 அன்று மாலை 07.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்தபோது அ.சா.1 பழனி என்பவர் கொடுத்த புகாரை நான் பெற்றுக்கொண்டேன். **அந்த புகார் அ.த.சா.ஆ.7**. பின்னர் நான் அன்றே மாலை 07.00 மணிக்கு காவல் நிலைய குற்ற எண் 100/2023, பிரிவுகள் 294(பி), 323, 324, 307, 506(2) இ.த.ச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.8.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் அதன் நகல்களை காவலர் மூலம் சம்பந்தப்பட்ட நீதிமன்றம் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

12.04.2023 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 17.04.2023 அன்றுதான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றும் ஐந்து நாட்கள் கால தாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதம் எதிரியை நிர்ணயம் செய்ய ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகார் என்னால் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 இடம் எழுதாத வெள்ளை தாளில்தான் கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.03.12 17:01:23 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு),
வேலூர்.

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**S,C.No.133 of 2025**

Prosecution Witness No.P.W.12 (L.W.16)

| | |
|---|---|
| Name | சுப்பிரமணி |
| Father/Husband Name | சின்ன வெள்ளை |
| Calling/Occupation | ஆய்வாளர் |
| Age | 52 |
| Address | வேலூர் கிராமிய காவல் நிலையம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026.

(A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.04.2023 அன்று எங்களுடன் பணிபுரிந்த கையொப்பம் பரிட்சையம் ஆன இந்த வழக்கில் பணிபுரிந்த ஆய்வாளர் கருணாகரன் என்பவர் நன்கு பரிட்சையம் ஆனவர். அவர் இந்த வழக்கில் அ.சா.11 பதிவு செய்த வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்டு 12.04.2023 அன்று இரவு 08.00 மணிக்கு இந்த வழக்கின் சம்பவ இடமான வேலூர் டீ என்எச் ரோட்டில் சந்திப்பில் சந்தோஷ் நாயுடு ஓட்டல் கடையிடம் சாட்சிகள் ஜெயசங்கர் மற்றும் மக்புல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் தயாரித்து மேற்கண்ட சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.9.**

பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். **அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.10.** பின்னர் அன்றே சாட்சிகள் அ.சா.1, 2 ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமுலங்களை பதிவு செயதுள்ளார். மேலும் 13.04.2023 அன்று சாட்சிகள் அ.சா.3, 4, 5, 7 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

மேலும் சாட்சிகள் மக்புல் மற்றும் ஜெயசங்கர் ஆகியார்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்துள்ளார். மேலும் அ.சா.6 ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் ஆஜர் எதிரி ரவி த/பெ.ராஜா என்பவரை தேடி செல்லும்போது 15.04.2023 அன்று திப்பசமுத்திரம் கிராமம், பிராமண மங்கலம் ரோடு சந்திப்பிடம் பகல் 11.45 மணிக்கு சாட்சிகள் கோபி மற்றும் தேவேந்திரன் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்துள்ளார்.

ஆஜர் எதிரி மற்றும் இந்த வழக்கில் இளம் சிறார் லோகேஷ் என்பவரையும் கைது செய்து விசாரிக்கையில் ஆஜர் எதிரி தன்னிச்சையாக மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் வாக்குமுலம் கொடுத்துள்ளார். அதை ஆய்வாளர் பதிவு செய்து எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார். ஆஜர் எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய வெட்டுக்கத்தி மற்றும் ஆட்டோவை தங்கள் முன்பு ஆஜர் செய்கிறேன் என்று சொல்லி ஆஜர் செய்ய அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.11.**

(சான்று பொருட்கள் மற்றும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.03.12 17:01:31 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு),
வேலூர்.